தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தித் திணிப்பா?

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்குத் த.வெ.க. அரசு ஒப்புதல் அளிக்கிறதா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, நவ.13-

தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தி எழுத்துக்கள் இடம் பெற்றிருப்பதற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு த.வெ.க. அரசு ஒப்புதல் அளிக்கிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க அரசு தனது திட்டங்களை ஒவ்வொன்றாகத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான மும்முரத்தில் இருக்கிறது.

அதற்கு, த.வெ.க. தலைமையிலான கூட்டணி அரசைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. 'அதிகாரம் கிடைத்தால் போதும், யார் ஆட்டுவித்தால் என்ன?' என்ற தொனியில் தான் த.வெ.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.மாநில உரிமைப் பறிப்பு, பண்பாட்டுத் திணிப்பு, நிதி குறைப்பு என்ற எந்தப் பிரச்சினைக்கும் வாயைத் திறக்காமல் அமைதியாக இருக்கிறது த.வெ.க.அரசு. தமிழ் நாட்டைக் கபளீகரம் செய்ய பல்வேறு மறைமுகமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அதே நேரம், தமிழ்நாடும், தமிழ்நாடு அரசும் இதை எப்படி எதிர் கொள்கிறார்கள் என்று பார்ப்பதற்கு வெளிப்படையாகவும் சில வேலைகளில் ஈடுபடுகிறது.



ஏதேதோ காரணம் சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைத் துறை வைத்த பெயர்ப்பலகைகளில் இந்தி இருந்தது என்று கண்டனம் எழுந்தபோது, உடனடியாக ஓர் அமைச்சர் அதனை மறுத்து, சில அதிகாரிகளின் தவறு என்று காரணம் சொல்லிவிட்டு, இரு அதிகாரிகளைப் பணியிடை நீக்கம் செய்து ஒரு பரபரப்பைக் காட்டிவிட்டு ஓய்ந்தார்கள்.

கரூர் அரசு மருத்துவமனையில், மருந்துப் பையில் ஹிந்தி இருந்ததற்கும் ஏதேதோ காரணம் சொன்னார்கள்.

இந்தி ஒட்டகம், தமிழ் நாடு கூடாரத்திற்குள் தலையை நுழைக்கிறது, இதன்மூலம் - எச்சரிக்கை.

தஞ்சை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில்...

இப்போது தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்திலும் மைல்கற்களைப் புதுப்பித்து, அதில் மும்மொழியில் எழுதவிருக்கிறார்கள் என்ற செய்தியும், அதன் தொடக்கமாக தஞ்சை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் இந்தியிலும் எழுதப்பட்டு இருக்கிறது என்னும் செய்தியும் வந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கை என்னாயிற்று? அறிஞர் அண்ணா காலத்திலிருந்து (1967 முதல்) உறுதியாக இருந்துவரும் ஆட்சிகளைப் போல இதில் இருக்கப் போகிறார்களா? இல்லை, இருமொழிக் கொள்கையில் இந்த அரசு உறுதியாக இருக்கும் என்பது வெறும் வாய்வார்த்தை தானா? பா.ஜ.க. அரசுக்குப் பயந்து இந்தித் திணிப்பை அனுமதித்தால், தமிழ்நாட்டு மக்களும், இளைஞர்களும் அதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ரயில்வே துறையிலும் இந்திக்கு முதன்மையிடம் தரும் வகையில், எல்லா ரயில் நிலையங்களிலும் பெயர்ப் பலகையைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

போராட்டத்தைத் தூண்ட நினைக்கிறதா?

தமிழ்நாட்டில் இன்னொரு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைத்தூண்ட நினைக்கிறதா ஒன்றிய அரசு? அதற்குத் துணைபோகிறதா தமிழ் நாடு த.வெ.க. அரசு?

இந்தி - சமஸ்கிருத மொழி - பண்பாட்டுத் திணிப்புகளை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்டோர் தமிழ் மறவர்கள்! நெருப்புடன் விளையாட நினைக்க வேண்டாம் ஒன்றிய அரசு என்று எச்சரிக்க வேண்டியது நம் கடமை!

ரயில் நிலையங்களில் தமிழுக்கு முதன்மை, நெடுஞ்சாலைக் கற்களில் இருமொழி என்ற நிலைமை திரும்பவில்லை என்றால், இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தத் திராவிடர் கழகம் தயங்காது! தயங்காது!!

எச்சரிக்கை!

எச்சரிக்கை!!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து; 'த.வெ.க. ஆட்சியில் ஊழலே இல்லை; த.வெ.க. ஆட்சியை கலைக்க சதி நடக்குதுன்னு', த.வெ.க. தலைவர் - சாரி - மாநில காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாக்கூர் சொல்லி இருக்காரே! தெரியுமா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; **தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணியில் இருந்தபோதே த.வெ.க.வுடன் மறைமுகத் தொடர்பில் இருந்தவர்களில் அவரும் ஒருத்தர் தானே! அப்படித்தான் சொல்லுவார். எப்படியோ அவருக்கு 'காரியம்' ஆனா சரி!**

ஆறே மாசம்! நாடே நாசம்!



கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு!

தூத்துக்குடியில் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த

மீனவர் தம்பிராஜ் குடும்பத்திற்கு உரிய நிவாரணத் தொகையை வழங்குக!

குடும்பத்தினருக்கு நேரில் ஆறுதல் தெரிவித்தபின் – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



தூத்துக்குடி, நவ.13-

கழகத் துணைப் பொதுச் செயலாளர் - தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தூத்துக்குடியில் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவர் தம்பிராஜ் அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவரது குடும்பத்தினருக்கு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

இரவு 8 மணியளவில் தம்பிராஜ் கடலில் தவறி விழுந்தபோதே மீன்வளத்துறைக்குத் தகவல் தெரிவித்ததாகவும், ஆனால் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததால், சக மீனவர்களே மறுநாள் அவரது உடலை மீட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

உயிருக்குப் போராடிய மீனவரை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்காத மீன்வளத் துறையின் அலட்சியம் கண்டிக்கத்தக்கது. மீனவர்கள் கடலில் காணாமல் போவதும், பின்னர் சடலமாக மீட்கப்படுவதும் தொடர்கதையாகி வருவது மிகுந்த வேதனையளிக்கிறது.

உயிரிழந்த மீனவர் தம்பிராஜ் அவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணத் தொகையை அரசு உடனடியாக வழங்குவதுடன், இது போன்ற சம்பவங்களில் மீனவர்களை விரைந்து மீட்பதற்கான நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகிறது!

சென்னை, நவ. 13 -

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி இன்று (13ஆம் தேதி) உருவாக வாய்ப்பு இருக்கிறது. இது படிப்படியாக வலுவடைந்து தாழ்வு மண்டலமாக வருகிற 15ஆம் தேதி இலங்கையை யொட்டிய வங்கக்கடல் பகுதிக்கு வந்து நிற்க வாய்ப்பு இருக்கிறது. அதன் பின்னர் மேலும் வலுப்பெற்று தமிழகக் கடற்கரைப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

புயலாகவும் மாற வாய்ப்பு உள்ளது. இது தமிழகத்தை நோக்கி வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் வருகிற 15ஆம் தேதியில் இருந்து மழைக்கான சூழல் அதிகரித்துள்ளது. 20ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் நல்ல மழை இருக்கும்.

புயலாக மாறும் பட்சத்தில் அது தமிழகப் பகுதிகளில் 19ஆம் தேதியோ, அதற்கடுத்த நாட்களிலோ கரையைக் கடக்க வாய்ப்பு இருக்கிறது. அண்மையில் அடுத்தடுத்து இரண்டு புயல்கள் குறுகிய காலத்தில் உருவான தால், முதல் புயல் கரையைக் கடந்ததும் கடலுக்குச் சென்ற சென்னை காசிமேடு மீனவர்கள் இரண்டாவது புயலில் சிக்கிக்கொண்டனர். இதில் த.வெ.க. அரசின் அலட்சியத்தால் 9 மீனவர்கள் உயிரிழந்தனர். எனவே மீனவர்கள் எவரும் இன்று முதல் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

'டம்மி' முதல்வர் ஆட்சியில் – தேனியைத் தொடர்ந்து

நெல்லை, குமரியிலும் 5 சப்-இன்ஸ்பெக்டர்களை வெட்டிக் கொல்ல முயற்சி!

செயலற்றுக் கிடக்கும் காவல்துறை!

நாகர்கோவில், நவ. 13-

குமரி, நெல்லை மாவட்டத்தில் போலீசுக்கே மிரட்டல் விடுக்கும் வகையில் ரவுடிகள் அட்டகாசம் பெருகியுள்ளது. ரவுடிகளை வேட்டையாடச் சென்ற 5 எஸ்.ஐ.க்களை அரிவாளால் வெட்ட முயற்சி நடந்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தீபாவளியையொட்டி தேனி சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் உள்பட 17 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மது மற்றும் கஞ்சா போதையில் கொலைகள் நடந்துள்ளன. கொலை செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் ரவுடிகள் பட்டியலில் உள்ளவர்கள் ஆவர்.

இந்த சம்பவங்களை தொடர்ந்து ரவுடிகள் பட்டியலில் உள்ளவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமாகின. அதன்படி நேற்று முன்தினம் தமிழ்நாடு முழுவதும் ரவுடிகள் வேட்டை நடந்தது. குமரி மாவட்டத்திலும் ரவுடிகள் வேட்டை நடைபெற்றது. ரவுடிகள் பட்டியலில் உள்ளவர்களை போலீசார் கைது செய்ய சென்றபோது போலீசாரையே மிரட்டும் அளவுக்கு 5 இடங்களில் எஸ்.ஐ.களை அரிவாளால் வெட்ட முயற்சி நடந்துள்ளது.

★ குமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் அருகே எஸ்.ஐ. பென்சன் தலைமையில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது, வடலிவிளை சாந்தபுரத்தை சேர்ந்த அருள் (27), பருத்திவிளை பகுதியை சேர்ந்த பாபு (36) ஆகியோர் சாக்கு பையுடன், தனியார் மண்டபம் அருகே நின்று கொண்டிருந்தனர். அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்திய போது, திடீரென பையில் இருந்த அரிவாளை எடுத்து எஸ்.ஐ. பென்சனை வெட்ட முயன்றதாக கூறப்படுகிறது. இதில் எஸ்.ஐ. மற்றும் போலீசார் தப்பினர். இதையடுத்து அருள், பாபு இருவரையும் போலீசார் கைது செய்தனர். இவர்கள் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் பட்டியலில் உள்ளனர்.

★ தென்தாமரைக்குளம் அருகே உள்ள முகிலன் குடியிருப்பு சந்திப்பு பகுதியில் எஸ்.ஐ. சுரேஷ் தலைமையில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது, நடுரோட்டில் அரிவாளை தேய்த்தபடி சென்று பொதுமக்களை அச்சுறுத்தியதாக முகிலன்குடியிருப்பு பகுதியை சேர்ந்த பால ஸ்ரீராமச்சந்திரன் என்ற கண்ணன் (33), அகஸ்தீஸ்வரத்தை சேர்ந்த முத்து என்ற முத்துக்குமார் (38) ஆகியோரை கைது செய்ய சென்றனர். அப்போது அவர்கள் போலீசாரிடமும் அரிவாளை காட்டி மிரட்டி தப்ப முயன்றனர். அவர்களை போலீசார் சுற்றிவளைத்து பிடித்தனர். இவர்கள் இருவரும் குற்ற வாளிகள் சரித்திர பதிவேடு பட்டியலில் உள்ளனர்.

★ அஞ்சுகிராமம் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் பிரிய ராஜ்குமார் தலைமையிலான போலீசார் ரஸ்தாகாடு சந்திப்பு பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது வட்டக்கோட்டையைச் சேர்ந்த பெலிக்ஸ், பால்குளம் அடுக்குமாடி குடியிருப்பைச் சேர்ந்த சுரேந்தர், ஆமணக்கன் விளையைச் சேர்ந்த நந்த கோபால் ஆகியோர் அந்த பகுதியில் நின்று கொண்டிருந்தனர். அவர்களை கலைந்து போகுமாறு எஸ்.ஐ. பிரிய ராஜ்குமார் கூறினார்.

அப்போது அவர்கள், நீ உயிரோடு இருந்தால் தானே எங்கள் வீட்டுக்கு சோதனை செய்ய வருவாய் என கூறி, அரிவாளை எடுத்து எஸ்.ஐ. பிரிய ராஜ் குமாரை வெட்ட முயன்றனர். இதில் அவர் உயிர் தப்பினார். அஞ்சுகிராமம் போலீசார் வழக்கு பதிந்து 3 பேரையும் கைது செய்தனர். இவர்கள் மீது ஏற்கனவே வழக்குகள் உள்ளன.

★ சுசீந்திரம் சப் இன்ஸ்பெக்டர் கல்யாணசுந்தரம், நேற்று முன்தினம் மாலை பறக்கை காடேற்றி குளம் அருகே ரோந்து பணியில் இருந்த போது, அந்த வழியாக புத்தளம் அரிய பெருமாள் விளையை சேர்ந்த தனபாலன் (23) என்பவர் சாக்கு பையுடன் வந்தார். அவரை தடுத்து நிறுத்தி விசாரித்த போது, அரிவாளை எடுத்து எஸ்.ஐ. கல்யாண சுந்தரத்தை வெட்ட முயன்றுள்ளார். இதில் எஸ்.ஐ. தப்பினார். இது குறித்து சுசீந்திரம் போலீசார் தனபாலன் மீது வழக்கு பதிந்து கைது செய்தனர்.

★ நெல்லை அருகே தாழையூத்து காவல் நிலைய எஸ்.ஐ சுதன் மற்றும் சிறப்பு எஸ்.ஐ சந்திரன் உள்ளிட்ட போலீசார் தீபாவளி பண்டி கையை ஒட்டி தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். தாழையூத்து ரயில்வே கேட் அருகில் இரவு நேரத்தில் போலீசார் சென்றபோது, அங்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் 4 பேர் நின்றிருந்தனர். உடனே போலீசார் அவர்களிடம் சென்று விசாரித்துள்ளனர்.

அப்போது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்தனர். திடீரென அந்த 4 பேரும் சேர்ந்து போலீசாரை திட்டி கொலைமிரட்டல் விடுத்தனர். தொடர்ந்து அக்கும்பலில் ஒருவரான தாழையூத்து ஸ்ரீநகர் மின்நகரை சேர்ந்த செல்வராஜா (19) என்பவர் திடீரென தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் சப் இன்ஸ்பெக்டர் சுதனை வெட்ட முயன்றார். ஆனால் அவர் விலகிக் கொண்டதால் தப்பினார். பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப்பிச்சென்றது. இதுகுறித்து தாழையூத்து போலீசார் வழக்குப்பதிந்து செல்வராஜாவை கைது செய்தனர். மற்ற 3 பேரையும் தேடி வருகின்றனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, கழக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஆவடியை அடுத்த கோவர்தனகிரி பகுதியைச் சேர்ந்த மாணவர் ஜெகதீசனின் கல்விச் செலவிற்காக வழங்கிய ரூ.25 ஆயிரம் நிதியுதவி காசோலையை, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் முன்னிலையில் வழங்கினார். இந்நிகழ்வில் மாநகரப் பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதீஷ் குமார் உடனிருந்தனர்.